# தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் அவர்களுடனான CSSTயின் நேர்காணல்

*1.) இலங்கையின் தற்கால அரசியல் சூழ்நிலையினை அமெரிக்காவிற்கான ஒரு சவாலாகப் பார்க்க முடியுமா? இக்கேள்வியை இங்கு எழுப்புவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. மேற்கத்திய சார்பு அமைப்பான ஐக்கிய தேசியக் கட்சியானது (UNP) இலங்கை அரசியல் வரலாற்றில் கடுமையான பின்னடைவை சந்தித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியானது மேற்கத்திய நாடுகளுடனான இலங்கையின் உறவுகளை வரையறுக்கும் ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது சர்வதேச பழமைவாத அரசியல் கட்சிகளின் குழுவான சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தில் உறுப்பினராக உள்ளது. எனினும், அக்கட்சி தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில், அமெரிக்க-இலங்கை உறவுகள் நெருக்கடியில் இருக்கும் என எதிர்வுகூற முடியுமா? உங்கள் அவதானிப்பு என்ன?*

பொதுவான ஜனநாயக விழுமியங்கள் மற்றும் இலங்கையை இயலுமானவரை அதிக செழிப்பான மற்றும் பாதுகாப்பான நாடாக ஆக்குவதற்கான எமது இணைந்த உறுதியின் அடிப்படையில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு கட்டமைக்கப்பட்டுள்ளது - கடல்சார் பாதுகாப்பு, சூழற்பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு போன்ற முக்கிய விடயங்களில் எமக்கிடையிலான ஒத்துழைப்பால் அவ்வுறவு வலுப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு அரசியல் பின்னணியுடைய இலங்கையர்களுடன் நாம் நல்ல உறவைக் கொண்டுள்ளோம், மற்றும் இலங்கையின் அனைத்து வகையான பின்னணியுடைய தனிநபர்களுடனான பங்காண்மை மற்றும் கலந்துரையாடலை நாம் மதிக்கிறோம்.

எந்தவொரு உறவையும் போலவே, தொடர்புகளை வலுப்படுத்தவும் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பவும் எம்மால் இன்னும் அதிகம் பணியாற்ற முடியும். ஆகையினால்தான், நாம் நேருக்கு நேர் பார்க்காத போதும், நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் மற்றும்

தீர்வுகளைக் காணவும் ஒன்றாக இணைந்து பணியாற்றக்கூடியவாறு, எமது இலங்கைப் பங்குதாரர்களுடன் திறந்த தொடர்பாடலுக்கான வழிகளைத் தொடர்ந்தும் பேணுதல் மிகவும் முக்கியமாகும்.

இலங்கையில் நாம் வழங்கும் வெளிநாட்டு உதவிகள், அடிப்படையில் கட்சி சார்பற்றது. அனைத்து இலங்கையர்களதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நீதியான மற்றும் செழிப்பான நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உதவிசெய்ய நாம் முயற்சி செய்கிறோம். உதாரணமாக, கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான ஆலோசனைக் குழுவொன்றின் ஊடாக நாம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உதவிசெய்கிறோம். இவ்வுதவியின் ஊடாக, தொழில்முறையிலான பாராளுமன்ற பணிக்குழுவினர் மற்றும் அனைத்து கட்சிகளதும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உதவிசெய்வதன் மூலம், நாம் அனைத்து இலங்கையர்களதும் தேவைகளை சிறப்பாக நிறைவேற்ற பாராளுமன்றத்திற்கு உதவுகிறோம்.

இக்கட்சிசார்பற்ற உதவிகளின் ஏனைய உதாரணங்கள், ஊனமுற்றோர் தொடர்பான முன்முயற்சிகள், பெண்ணுரிமைகள் மற்றும் பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுத்தல், அதேபோன்று வன்முறை மற்றும் துன்புறுத்தல் தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) 190 ஆம் இலக்க (C190) சமவாயத்தினை ஏற்றுறுதிப்படுத்துதல் ஆகிவை தொடர்பான தேசிய மட்டத்திலான கொள்கைக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு 9ஆவது பாராளுமன்றத்தின் மகளிர் நாடாளுமன்றக் குழுவிற்கு (WPC) வழங்கிய தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அமெரிக்க உதவியின் மூலம், WPC மற்றும் பெண்கள் தொடர்பான தேர்வுக் குழு ஆகியவை பாராளுமன்றத்தில் தமது சட்டப்பூர்வ பரிந்துரைகளைச் சீர்படுத்துவதற்கான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை விவாதங்களை மேற்கொண்டன.

அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பாலினத்தைக் கருத்திற் கொள்வதை ஊக்குவிப்பதற்காக நாம் தொழில்நுட்ப மற்றும் நிறுவன உதவிகளையும் வழங்குகிறோம். பாலின பொறுப்பு வரவு செலவு திட்ட (GRB) வழிகாட்டுதல்கள், செயற்திறன் காட்டிகள், மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சின் பாலின மையநீரோட்டக் கையேட்டில் GRB தொடர்பான ஒரு அத்தியாயம் ஆகியவற்றை வரைவதன் ஊடாக

சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் எனும் பார்வையுடன் வளங்களை ஒதுக்கவும் திட்டமிடவும் இலங்கை அரசுக்கு நாம் உதவுகிறோம். தமது அரசியல் நடைமுறைகளிலும் பொருளாதாரங்களிலும் வலுவான பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நாடுகள், வெறும் நீதியான சமூகங்களாக மட்டுமன்றி, அவை மிகவும் செழிப்பான சமூகங்களாகவும் காணப்படுகின்றன. பொருளாதாரத்தை முன்னோக்கி செலுத்தும் மற்றும் செழிப்பினைப் பகிர்ந்துகொள்வதை ஊக்குவிக்கும் இது போன்ற முன்முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக எமது இலங்கைப் பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்ற நாம் எதிர் பார்க்கிறோம்.

*2.) 2018 ஆம் ஆண்டில் உங்கள் சாட்சியத்தில், இம்முயற்சியில் இலங்கையின் வெற்றியானது அதனை அமெரிக்காவின் வலுவான பங்குதாரராக மாற்றும் எனவும், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பற்றிய எமது பொதுவான பார்வைக்கு அது பங்களிப்புச்செய்யும் எனவும் குறிப்பிட்டீர்கள். இலங்கையின் தற்போதைய அரசாங்கம் வெளிநாட்டு உறவுகளில் நடுநிலையைக் கடைப்பிடிப்பதாகக் கூறுகிறது. இவ்வாறான சூழலில், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக்கிற்கான நோக்கில் வலுவான பங்காளியாக இருப்பது இலங்கைக்கு சவாலானது அல்ல, மறுபுறம், இந்தோ-பசிபிக் பார்வையை சீனா கடுமையாக எதிர்க்கிறது. சமீபத்தில் அமெரிக்கா தலைமையிலான குவாட் (Quad) கூட்டணியில் இணைவதற்கு எதிராக சீனா வங்கதேசத்தை எச்சரித்தது மற்றும் அது 'குறுகிய நோக்கமுடையது' எனக் கூறியது. இவ்வாறான சூழலில், நடுநிலை கொள்கையுடன் FOIP இன் நோக்கில் ஒரு வலுவான பங்குதாரராக இலங்கையால் இருக்க முடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?*

குவாட் (Quad) என்றால் என்ன என்பதை முதலில் விளக்குவதன் மூலம் இக்கேள்விக்கு பதிலளிக்கிறேன். செயற்பாட்டு ரீதியிலான ஒத்துழைப்பு மூலம் முடிவுகளை வழங்க உறுதிபூண்ட நான்கு ஜனநாயக நாடுகள் -

ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா – ஆகியன இப்பிராந்தியத்தை அழித்த 2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிக்குப் பின்னர், ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணங்களை வழங்குவதற்காக ஒன்றுசேர்ந்தன. "குவாட்" என அழைக்கப்படும் இந்த ஒத்துழைப்பு நெருக்கடி நிலையில் பிறந்தது மற்றும் சுதந்திரமான, திறந்த, மீள்தன்மையுடைய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு இந்தோ-பசிபிக் பிராந்தியம் தொடர்பான பொதுவான நோக்கிற்கான இராஜதந்திர உரையாடல் மற்றும் அர்ப்பணிப்பாக உருவானது.

சுதந்திரமான, திறந்த, மீள்தன்மையுடைய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தோ-பசிபிக் பற்றிய ஒரு நோக்கினைப் பகிர்ந்து கொள்வதில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் எந்தவித சவாலும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இந்த பகிரப்பட்ட தொலை நோக்கானது, அனைத்து நாடுகளதும் ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றிற்கு அடிப்படையான விரிவான விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை நிலைநிறுத்துதல் பற்றியதாகும். இக்கொள்கைகள், கடலில் பயணிப்பதற்கான சுதந்திரம் மற்றும் முரண்பாடுகளை அமைதியான முறையில் தீர்த்தல்; நியாயமான, வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கைகள்; மற்றும் நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இக்கொள்கைகள் மிகவும் பரந்தவையாதலால், இவற்றை இலங்கையின் கண்ணோட்டத்தில் பார்ப்போம். உலகின் கொள்கலன் கப்பல்களில் அரைவாசியும், உலகின் மொத்த சரக்குப் போக்குவரத்தின் மூன்றில் ஒரு பங்கும், மற்றும் உலகின் எண்ணெய் காவும் கப்பல்களில் மூன்றில் இரண்டு பங்கும் கடந்து செல்லும் இந்தியப் பெருங்கடலின் மிகவும் பரபரப்பான கடற் பாதைக்கு அருகில் இலங்கை அமைந்துள்ளது. கப்பல் போக்குவரத்தானது கடலில் பயணிப்பதற்கான சுதந்திரத்தை சார்ந்துள்ளது. அது இல்லாமல், இலங்கை அதன் புவிசார் மூலோபாய நிலை மற்றும் துறைமுக முதலீடுகளை முழுமையாக சாதகமாக்கிக் கொள்ள முடியாது. மற்றும், உங்களுக்குத் தெரிந்தவாறே, இந்நாட்டின் மிகப்பெரிய தனி நாட்டு ஏற்றுமதி சந்தையாகவுள்ள அமெரிக்காவானது

இலங்கையின் மிக முக்கியமான பொருளாதாரப் பங்குதாரர்களில் ஒன்றாகும் - மற்றும் இதுவும் கடலில் பயணிப்பதற்கான சுதந்திரம் இல்லாமல் வெறுமனே நடக்கக்கூடிய விடயமல்ல.

கடல்சார் சமவாயங்களின் கீழ் "EEZ" எனப்படும், இலங்கையின் விரிவான பிரத்தியேக பொருளாதார வலயமானது, கடல் வளங்கள் நிறைந்தது. ஆனால் அதே வளங்கள், கடல்சார் சூழல் தொகுதிகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (IUU) மீன்பிடிப்பிற்கு அவ்வலயம் இலக்காவதற்கான காரணமாகவும் அமைகிறது. ஆகையினால்தான் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்கள் உலக சந்தைகளுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு இலங்கையும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட உறுதிபூண்டுள்ளன.

எவ்வாறாயினும், இலங்கையின் விரும்பத்தக்க அமைவிடம் காரணமாக, ஆட்கடத்தல், ஆயுதக்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற நாடுகடந்த குற்றச்செயல்கள் தொடர்பான சவால்களையும் இலங்கை எதிர்கொள்கிறது. இதனால்தான் கடல்சார் பாதுகாப்பு என்பது அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் ஒரு பொதுவான மூலோபாய அக்கறை கொண்ட பகுதியாகும். அதன்காரணமாகவே, காவல்கண்காணிப்பு மற்றும் இடைமறிப்புகள் உள்ளிட்ட கடல்சார் திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை விமானப்படையுடன் அமெரிக்கா இணைந்து செயற்படுகிறது. இப்பங்காண்மை ஊடாக, அமெரிக்காவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கப்பல்களின் உதவியுடன், இலங்கை அதன் வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் கைப்பற்றலை 2020 மார்ச்மாதத்தில் மேற்கொண்டது.

ஒரு தெளிவுபடுத்தலுக்காக: இந்தோ-பசிபிக் பற்றிய எமக்குள்ள பொதுவான நோக்கானது, உறுப்புரிமை அல்லது அரசியல் சார்புநிலைகளால் வரையறுக்கப்படவோ அல்லது கட்டுப்படுத்தப்படவோ இல்லை. அதற்குப் பதிலாக உலகின் இந்த பரந்த பகுதி பாதுகாப்பாகவும் மற்றும் செழிப்பாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கும், மற்றும் முரண்பாடுகளுக்கான அமைதியான தீர்வு மற்றும் வெளிப்படையான, நியாயமான மற்றும் திறந்த வர்த்தகம்

மற்றும் போட்டி போன்ற முக்கிய கொள்கைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்வதற்குமான ஒரு முயற்சியாகும்.

ஜனாதிபதி ராஜபக்சவின் விஞ்ஞாபனமான, "சுபீட்சத்தின் நோக்கும்" இதே கொள்கைகளை முன்வைப்பதுடன் சர்வதேச விதிமுறைகளுடன் அதிகளவில் ஒத்துப்போகும் வகையில் காலாவதியான சட்ட நடைமுறைகள் மற்றும் சட்டங்களை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறே, பொருளாதாரக் கொள்கை உருவாக்கத்தில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், வலுவான தனியார் துறை மற்றும் வர்த்தகச் சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் அவ்விஞ்ஞாபனம் குறிப்பிடுகிறது. இந்த இலக்குகள் அனைத்தும் அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் பொதுவானவை மற்றும், எதிர்காலத்தில் அந்த பரஸ்பர நோக்கங்களை மேலும் பலப்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்.

*3.) இலங்கையில் சீனாவின் முதலீட்டுச் செயற்திட்டத்திற்கு பரவலான விமர்சனங்கள் உள்ளன. ஆனால் சீனத் தூதுவர் கொழும்பு துறைமுக நகர செயற்திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்திட்டம் ஆகியன இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் இரட்டை இயந்திரங்கள் என விவரித்தார். ஆனால் துறைமுக நகரமானது பணச்சலவை செய்பவர்களும் ஏனைய மோசடியாளர்களும் பயனடையக்கூடிய ஒரு சொர்க்கபுரியை உருவாக்கக்கூடும் என நீங்கள் எச்சரித்தீர்கள். மறுபுறம், துறைமுக நகர செயற்திட்டத்தை பொருளாதார மீட்பராக அரசாங்கம் பார்ப்பதுபோல் தெரிகிறது. இவ்வாறான சூழ்நிலையில் துறைமுக நகரத்தில் மேற்கத்திய நாடுகள், முக்கியமாக அமெரிக்க முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதா?*

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட துறைமுக நகர சட்டத்தின் சில அம்சங்கள் குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் கரிசனையுடன் உள்ளது. ஊழல் தலையீடுகள் மற்றும் மோசடியாளர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான அனுமதிக்கப்பட்ட சூழல் என அவர்கள் கருதும் சூழலை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும்

மோசடியாளர்களின் சட்டவிரோத நிதியிடல்கள், பணச்சலவை மற்றும்/அல்லது பிற செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அமெரிக்க நிறுவனங்கள் அதைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்.

இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தும் அமெரிக்க நிறுவனங்கள் எதிர்வுகூறத்தக்க தன்மை மற்றும் முதலீட்டு சூழல் பற்றிய ஒரு தெளிவான புரிதலை விரும்புகின்றன. அவர்கள் முதலீடு செய்தால், ஒழுங்குபடுத்தல் தாபனங்கள், தமது சொந்த பங்குதாரர்கள் அல்லது அவர்களின் இயக்குநர் சபை ஆகிவற்றிடமிருந்து பிரச்சினைகள் ஏற்படக்கூடிய அபாயங்களை அவர்கள் எதிர்கொள்ளப் போவதில்லை என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புவார்கள். வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டத்தின் (FCPA) கீழ், ஒரு அமெரிக்க நிறுவனமோ அல்லது தனிநபரோ வர்த்தகத்தைப் பெறுவதற்காகவோ அல்லது தக்கவைத்துக்கொள்வதற்காகவோ எந்தவொரு வெளிநாட்டு அதிகாரிக்கும் பணம் அல்லது பெறுமதியுள்ள எதையும் வழங்குதல் அல்லது வழங்குவதாக உறுதியளித்தல் சட்டவிரோதமானது. அமெரிக்கத் திறைசேரி அல்லது வர்த்தகத் திணைக்களத்தினால் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான தடைகள் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிறுவனங்களுக்கு வெளிக்காட்டப்படாதிருத்தல் அல்லது அவற்றுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை ஏற்படாதிருத்தல் பற்றிய நம்பிக்கை, இலங்கையில் முதலீடு செய்வதைக் கருத்தில் கொள்ளும் ஒரு அமெரிக்க நிறுவனத்திற்கு இருத்தல் அவசியம்.

துறைமுக நகர செயற்திட்டத்தில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீட்டைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கையின் அரசாங்கம் விரும்புகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம், அது புரிந்துகொள்ளக்கூடியதே. எமது எளிமையான எச்சரிக்கை என்னவென்றால், இவ்வளவு பாரிய உட்கட்டமைப்பு / அபிவிருத்தித் திட்டத்திற்கு, சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளைச் சரியாக இயற்றுவதும் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் நியாயமற்ற போட்டிகளுக்கான கதவு திறந்திருக்காமலிருப்பதை உறுதிசெய்வதும் மிகமிக முக்கியம். உதாரணமாக, பணச்சலவையினை அனுமதிக்கும் ஓட்டைகளை சட்டம் மூடவில்லையெனின் - மோசமான பணம், நல்ல பணத்தை விரட்டும் என்பது ஒரு பொதுவான விதியாகும்.

நீங்கள் "இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் இரட்டை இயந்திரங்கள்" என குறிப்பிட்டீர்கள். "இந்த இயந்திரங்கள் இலங்கையை எங்கு கொண்டு செல்லும்?" என்பது மிகவும் முக்கியமான கேள்வி என நான் நினைக்கிறேன். ஹம்பாந்தோட்டை துறைமுக செயற்திட்டம் நாட்டிற்கு ஒரு பெரும் கடனை ஏற்படுத்தியது மற்றும் அதன் விளைவாக இறுதியில் இலங்கை அடுத்த நூற்றாண்டிற்கு துறைமுகத்தினைக் குத்தகைக்கு வழங்க வேண்டியிருந்தது. கொழும்பு துறைமுக நகரம் சந்தேகத்திற்கிடமான பொருளாதார நடைமுறைகள் மற்றும் ஊழலுக்கு இலங்கையைத் திறக்கலாம். அதனால் யார் பயனடைவார்கள்? சில மோசடியாளர்கள் பயனடைவார்கள் எனினும், இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும். மக்கள் பயனடைய வேண்டுமாயின், ஒரு நாட்டின் முதலீடுகள் நேர்மறையான வருமானத்தை உருவாக்குதல் அவசியம்; வேலைவாய்ப்புகள், வருமானம் அல்லது நற்பெயருக்கு ஏற்படக்கூடிய ஆபத்து ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும் முதலீடுகள் எதிர்கால பொருளாதார வளர்ச்சியின் மீதான ஒரு பாரதூரமான சுமையாகவே இருக்கும்.

பொருளாதார ரீதியில் வலுவான மற்றும் செழிப்பான ஒரு இலங்கையானது எமது இரு நாடுகளது நலனுக்கும் உகந்ததாகும். உலகப் பொருளாதாரத்தை இயக்குவதில் தனியார் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. உயர்தரமுடைய, அமெரிக்க தனியார் துறை முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பிராந்தியத்தில் ஒரு கவர்ச்சிகரமான மற்றும் நம்பகமான பொருளாதார பங்குதாரரர் எனும் இலங்கையின் உரிமை கோரலை உறுதிப்படுத்த உதவுவதற்கும் பொருத்தமான சரியான சூழ்நிலைகள் நிலவுவதை உறுதி செய்வது அரசாங்ம் முன்னுரிமை வழங்கும் கொள்கை இலக்காக இருத்தல் அவசியம்.

*4.) அண்மைக்காலமாக வடகிழக்கில் முதலீடு செய்வதில் சீனா ஆர்வம் காட்டுவதுபோல் தெரிகிறது. ஆனால் தமிழ் மக்களின் முக்கிய அரசியல் தலைவர்களான, தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA) இதை கடுமையாக எதிர்க்கிறது. இந்தியாவையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்தவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதைச் சொல்கிறது எனும் ஒரு கருத்து உள்ளது. அதே சமயம், இலங்கைக்கு இருக்கின்ற அதிக பொருளாதாரத் தேவைகள் காரணமாக முதலீட்டுச் செயற்திட்டங்களை ஒரு குறிப்பிட்ட வரயறையினைத் தாண்டி எதிர்க்க முடியாது என்பதுதான் உண்மை.*

*சீனாவின் முதலீடுகள் குறித்து அமெரிக்காவின் பொதுவான அவதானிப்பு என்ன?*

பொருளாதார ரீதியில் வருமானத்தை வழங்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும், மற்றும் கடன் அவசியமாயின், நாட்டினால் சமாளிக்கக்கூடிய ஒரு கடன் சுமையை விட்டுச் செல்லும் முதலீடே ஒரு நல்ல முதலீடாகும். வேறொரு நாடு இலங்கையில் முதலீடு செய்யும் போது, ஒவ்வொரு இலங்கையரும் இந்த முக்கியமான கேள்விகளைக் கருத்தில் கொள்வது அவசியம். இது வாக்குறுதியளிக்கப்பட்ட வருமானத்தை உருவாக்குகிறதா? அது ஏற்படுத்தும் கடன் சுமை பெறுமதியானதா? முதலீட்டின் ஒட்டுமொத்த தரம் என்ன?

தரமான பொருட்களை உருவாக்குவதற்காக எமது இரு நாடுகளிலுமுள்ள சிறந்தவற்றை இணைத்து, உற்பத்தி, தயாரிப்பு கண்டுபிடிப்பு மற்றும் விநியோகச் சங்கிலி ஆகியவற்றில் அமெரிக்க மற்றும் இலங்கை நிறுவனங்கள் பல நல்ல முதலீடுகளில் ஒன்றாகப் பணியாற்றுகின்றன. இந்த உறவுகள் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன, மற்றும் இந்த இணைந்துபணியாற்றும் மனப்பாங்கினால், நாம் யாரும் தனித்து உயர்த்த முடியாத அளவிற்கு தரத்தினை உயர்த்துகிறோம். உலகத் தரம் வாய்ந்த பாய்மரங்கள், மீன்பிடிப்பதற்காக தூண்டிலில் பயன்படுத்தப்படும் இரைகள், ஆடைகள் மற்றும் கடற் தொழில்நுட்பங்கள், முழு உலகமும் பயன்படுத்துவதற்காக, இலங்கையில், இலங்கையர்களால் வடிவமைக்கப்பட்ட மென்பொருட்கள் என அதன் விளைவுகளே அதற்குச் சான்றாக அமைகின்றன. இந்த வர்த்தக உறவுகள் எமது நாடுகளுக்கிடையேயான கருத்துக்களின் ஒரு தொடர்ச்சியான ஓட்டத்தை உறுதிப்படுத்துகின்றன மற்றும் முன்னெப்போதும் இல்லாத வலுவான வர்த்தக உறவுகளை உருவாக்குகின்றன.

நாடு முழுவதுமுள்ள அணைகள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக கிட்டத்தட்ட 70 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியளிப்பினை வழங்கும் உலக வங்கி மற்றும் இலங்கைக்கிடையிலான சமீபத்திய ஒப்பந்தம் ஒரு நல்ல முதலீட்டிற்கான உதாரணமாகும். இச்செயற்திட்டமானது வெள்ளம், வறட்சி மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றின் தாக்கத்தினைக் குறைப்பதுடன், நீரின் தரம் மற்றும்

விவசாயிகளின் விளைச்சலை மேம்படுத்தும். இது 356,000 கிராமப்புற குடும்பங்களுக்கு பயனளிக்கும் என எதிர்வுகூறப்படுகிறது.

மேலதிகமாக, அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (DFC) கடந்த ஆறு மாதங்களில் இலங்கையின் தனியார் வங்கிகளுக்கு 260 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நிதியளிப்பினை வழங்கியுள்ளது. அவை உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை ஊக்குவிக்கவும், தனியார் துறை முதலீட்டை வலுப்படுத்தவும், பெண் தொழில்முனைவோருக்கு உதவிசெய்யவும் பயன்படுத்தப்படுகிறது. வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுப்படுத்துவதன் மூலம், இந்த ஒப்பந்தமது நிதிரீதியில் உள்ளடக்கப்படுவதை விரிவுபடுத்துதல், பாலின சமத்துவமின்மையை கையாள்தல் மற்றும் பெண்கள் தலைமைதாங்கும் தொழில்முயற்சிகளுக்கான உதவிகளை அதிகரித்தல் ஆகிய எமது பொதுவான குறிக்கோள்களுடன் ஒத்துப்போகிறது.

எமது நீண்ட பங்காண்மை முழுவதும், இலங்கையின் விவசாயம் முதல் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, நீர் மற்றும் துப்பரவு, சூழல் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு, நுண் தொழில்முயற்சிகளுக்கான உதவிகள் மற்றும் தொழிற் திறன் பயிற்சி வரையான ஏறத்தாழ அனைத்து துறைகளுக்கும் அமெரிக்கா உதவிசெய்துள்ளது. இன்றுவரை, நாம் இலங்கைக்கு 350 பில்லியன் இலங்கை ரூபாய்களுக்கும் (2 பில்லியன் அமெரிக்க டொலர்) மேற்பட்ட பெறுமதியுள்ள உதவிகளை வழங்கியுள்ளோம். எமது பெரும்பாலான செயற்திட்டங்கள் இலங்கை நிபுணர்களைக் கொண்ட எமது பணிக்குழுவினரால் வடிவமைக்கப்படுகின்றன, மற்றும் நாம் மிகப் பெரிய தேவைகள் எங்கு உள்ளன மற்றும் அத்தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதை தீர்மானிப்பதற்காக மக்கள், தனியார் துறை மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுகிறோம். இலங்கை மக்களின் நல்வாழ்வு தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள உறுதியினை வெளிப்படுத்தும் வகையில், எமது உதவிகளில் பெருமளவானவை கடன்களாக அன்றி மானியங்கள் வடிவத்தில் வருகின்றன.

நாம் எப்போதும் வாழ்க்கையை மேம்படுத்தவும், சமூகங்களை கட்டியெழுப்பவும், தன்னிறைவை நிலைநாட்டவும் உதவக்கூடிய வழிகளைத் தேடுகிறோம். இதைச் செய்வதற்காக, அமெரிக்க மக்களின்

வரிப்பணத்திலிருந்து செலவிடப்படும் ஒவ்வொரு டொலரும் உண்மையான அபிவிருத்தி முடிவுகளை அடைவதை உத்தரவாதப்படுத்த நாம் உறுதிபூண்டுள்ளோம். உதாரணமாக, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) பிஸ்+ செயற்திட்டம் (Biz+ project) 60இற்கும் மேற்பட்ட வணிகங்களுக்கு, அவற்றை ஆரம்பிக்க அல்லது விரிவாக்க உதவியது. இதுவரை, அந்த முன்முயற்சியானது 8,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன் வர்த்தக முதலீடுகளில் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஈட்டியுள்ளது.

மற்றொரு உதாரணம் - நான் சில வருடங்களுக்கு முன்பு தம்புள்ளையில் உள்ள MA’s Spices எனும் நிறுவனத்திற்குச் சென்றபோது, எமது உதவிகள் காலப்போக்கில் எவ்வாறு பயன்களை வழங்குகின்றன என்பதை நேரடியாகக் கண்ணுற்றேன். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்கா MA’s Spices எனும் நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் ஆலோசனை, தரக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்ப உதவி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கியது. 2018 ஆம் ஆண்டில், MA’s ஒரு நடுத்தர அளவிலான நிறுவனமாக வளர உதவுவதற்காக நாம் மேலும் 57 மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்கினோம். இன்று, இந்த நிறுவனம் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு 350இற்கும் மேற்பட்ட தயாரிப்புகளை வழங்குவதுடன் 400 இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்பினையும் வழங்கியுள்ளது. அவர்கள் கடந்த மாதம் ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்புகளின் சிறந்த சிறு வணிகத்திற்கான விருதினையும் வென்றனர்.

இவை அனைத்தும் உள்ளூர் சமூகங்களுக்கான வேலைவாய்ப்புகளையும் மற்றும் பொருளாதார நடவடிக்கையையும் உருவாக்கிய உயர்தர முதலீடுகளாகும். இலங்கையர்கள் எதிர்பார்க்கும் முதலீட்டு வகை இதுதான்.

*5.) காணாமல் போனோரின் குடும்பங்கள் நடாத்திய போராட்டங்களின் போது அவர்கள் அமெரிக்க கொடியுடன் காணப்பட்டனர். அமெரிக்கா மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு இது ஒரு சான்று. எனினும், மனித உரிமை விவகாரங்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் இதுவரை ஏற்படவில்லை எனும் ஒரு பார்வை தமிழர்களிடையே உள்ளது. இதன் அடிப்படையில், இலங்கையின் மனித உரிமை விவகாரங்களில்*

*அமெரிக்காவின் தலையீடு எதிர்பார்த்த முடிவுகளைத் தரவில்லை எனக் கருத முடியுமா?*

சுதந்திரமான சமூகங்கள் மற்றும் மனித உரிமைகளை அமெரிக்கா ஆதரிக்கிறது, மற்றும் உள்நாட்டுப் போரின்போதும் மற்றும் இலங்கையின் வரலாற்றில் ஏனைய சந்தர்ப்பங்களிலும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் - அனைத்து சமூகங்கள் மற்றும் அனைத்து வகையான நிலையிலுள்ள குடும்பங்களுக்கும் - பதிலளிப்பது அவசியம் என நாம் நம்புகிறோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் கடந்த பின்னும், தமது அன்புக்குரியவர்களைக் காணாது அவர்கள் பற்றிய பதில்களைத் தேடும் குடும்பங்களுடனான சந்திப்பு மற்றும் அவர்களின் குரல்களிலிருந்த வலியினைக் கேட்டமையானது, இலங்கையில் நான் கழித்த காலங்கள் பற்றிய எனது நினைவுகளில் எப்போதும் மறக்க முடியாதது. அடிப்படையில், இலங்கையர்களால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்பதுடன் நல்லிணக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்குவதை ஊக்குவிப்பதன் மூலம் தமது சொந்த நலன் மேம்படும் என்பதை பெரும்பாலான இலங்கையர்கள் புரிந்துகொள்கிறார்கள் என நான் நினைக்கிறேன். மற்றும் இது மனிதர்களால் செய்யக்கூடிய ஒரு செயலாகும். அந்த காணாமல் போன நபர் உங்கள் அன்புக்குரியவராக இருந்து பல ஆண்டுகளாக உங்களுக்கு பதில்கள் மறுக்கப்பட்டால் எவ்வாறு இருக்கும்?

உண்மையான நல்லிணக்கம் மற்றும் சமாதானம் வேரூன்ற வேண்டுமாயின் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக் கூறுவதற்கான ஒரு பொறிமுறை அவசியம். UNHRC போன்ற பொறிமுறைகள் இந்த இலக்கை அடைய உதவுகின்றன. தனது மக்கள் அனைவருக்கும் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு ஜனநாயக அரசானது, முதன்முதலில் முரண்பாடுகளைத் தூண்டிய அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை அர்த்தமுள்ள வகையில் தீர்ப்பதற்கு முயற்சி செய்யும் அதேவேளை, குற்றவியல் குற்றச்சாட்டுகளை உண்மையாகவும் நம்பகத்தன்மையுடனும் விசாரணை செய்வதற்கும் தீர்ப்பதற்கும் முன்வருதல் அவசியம்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை அமெரிக்கா பாதுகாப்பதானது, இக்கொள்கைகளில் நாம் எமது சொந்த நாட்டில் பூரணத்துவம் அடைந்துள்ளதால் அல்ல. நாம் எப்போதும் ஒரு "மிகவும் பூரணமான ஐக்கியத்தினை" உருவாக்கவும் எம்மை மிக உயர்ந்த தரத்தில் வைத்திருக்கவும் முயற்சி செய்கிறோம். ஒரு சமூகமாக சுய பிரதிபலிப்பு மற்றும் வளர்ச்சியின் அச்செயல்முறையனது சில நேரங்களில் கடினமாகவும் வேதனையாகவும் இருக்கலாம். ஆனால், ஜனநாயகங்கள் இவ்வாறுதான் செயற்படுகின்றன – ஏனெனில், இறுதியில், அரசானது அதனால் ஆளப்படுபவர்களுக்கு சேவை செய்வதற்கும் எமது சமூகங்கள் அமைதியாக பரிணாமம் அடைவதற்கும் உதவுவதற்காகவே உள்ளது.

ஐ.நா.வின் மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கு நாம் எமது நண்பர்களையும் பங்குதாரர்களையும் ஊக்குவிக்கிறோம். நாட்டில் நல்லிணக்க முயற்சிகளுக்கு நாம் தொடர்ந்து உதவிசெய்வதுடன் ஜனநாயக, செழிப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கையினை உருவாக்குவதில் உறுதியுடன் உள்ளோம்.

*6.) இலங்கையில் தமிழர் பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு அரசியல் பிரச்சினை. ஒரு அரசியல் தீர்வின் ஊடாக மட்டுமே அரசியல் பிரச்சினையைத் தீர்க்க முடியும். போர் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இவ்விடயத்தில் ஒரு ஆரம்ப இணக்கப்பாடு இன்னும் எட்டப்படவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தந்தினால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தம் கூட இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமெரிக்கா ஒரு அரசியல் தீர்வில் ஆர்வம் காட்டுவதாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் ஒரு பார்வை உள்ளது. இது தொடர்பாக இந்தியா தனது கரிசனையினை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறான ஒரு சூழலில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன?*

இலங்கையின் பல்வேறுபட்ட சமூகங்கள் அனைத்திற்குமான நல்லாட்சி, மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை அமெரிக்கா

ஆதரிக்கிறது - மற்றும் அரசியல் மட்டத்தில் அவற்றுக்கான தடைகளை அகற்றுவதற்காகப் பணியாற்றுவதும் அதில் அடங்கும். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளைப் (SDG) பின்பற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது, மற்றும் விசேடமாக வலுவான அரச நிறுவனங்கள் மற்றும் அமைதியான சமூகங்களை அவசியமாக்கும் SDG #16 உட்பட, அந்த இலக்குகளை அடைய இலங்கைக்கு நாம் உதவிசெய்கிறோம்.

இலங்கையில் ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கு அரசியல் பரிமாணங்கள் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்வதுடன், அரசியல் அரங்கில் முன்னேற்றத்தை நாம் வலியுறுத்துகிறோம். அரசியலமைப்பின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை நாம் ஆதரிப்பதுடன், மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கு நாம் அரசாங்கத்தை ஊக்குவிக்கிறோம். மேலதிக பணிகளையும் மேற்கொள்ளலாம், மற்றும் பல ஆண்டுகளாக இலங்கை அரசுக்குள் அதிக பிராந்திய மற்றும் உள்ளூர் அதிகாரமளிப்பை உறுதி செய்வதற்காக அரசியல் முறை மற்றும் நடைமுறைகளில் மேற்கொள்ளக்கூடிய மாற்றங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு பல முயற்சிகள் நடந்திருப்பதை நான் அறிவேன். இத்தகைய மாற்றங்களை இலங்கை மக்கள்தான் முடிவு செய்தல் வேண்டும் எனினும், இன முரண்பாடுகளின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கு ஏனைய உள்வாங்கல்களைப் போன்றே அரசியல் தீர்வுகளும் அவசியம் என அமெரிக்கா நம்புகிறது.

அதேநேரம், சிறிது கவனம் மற்றும் போதுமான வளங்களுடன், களத்தில் உள்ள மக்கள் தமது வேறுபாடுகளைக் களைவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை நாம் அறிவோம். அடிமட்ட அளவில் கட்சி சார்பற்ற முறையிலான அரசியல் நடவடிக்கைகளுக்கு நீண்டகாலமாக நாம் உதவியாக இருந்தோம். உதாரணமாக, திருகோணமலைக்கு வெளியே ஒரு சமூகத்தில் ஒரு நீர்க் கால்வாய் புறக்கணிக்கப்பட்டது மற்றும் அதன் விளைவாக அயலவர்களான ஒரு தமிழ் மற்றும் சிங்கள குழுக்களிடையே முரண்பாடு ஏற்பட்டது. அமெரிக்கா வழங்கிய ஒரு சிறிய மானியத்தின் உதவியுடன் புதுப்பிக்கப்பட்ட இக்கால்வாய் தற்போது பல்லின விவசாயிகளைக் கொண்ட ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. இது பாசனத்திற்காக தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் வெள்ளப் பாதிப்பினைக் குறைக்கவும்

பயன்படுகிறது. முரண்பாட்டின் அடிப்படையாக அமைந்த ஒரு உட்கட்டமைப்புப் பிரச்சினையினை நிவர்த்தி செய்ததன் மூலம், முரண்பட்டுக்கொண்டிருந்த இரு குழுக்கள் தற்போது மிகச் சிறந்த நிலையில் உள்ளன.

*7.) ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி மீண்டும் உருவானது சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத குழுக்களுக்கு ஒக்ஸிஜனைக் கொடுத்துள்ளது என பலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஆப்கானிஸ்தான் மீண்டும் நாடுகடந்த ஜிஹாதிகளின் சொர்க்கபுரியாக மாறலாம் என சிலர் எச்சரிக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில், இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதா? இலங்கையும் இஸ்லாமிய பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடு.*

இலங்கையர்களுக்கு நன்கு தெரிந்தவாறே, பயங்கரவாதம் என்பது ஒரு உலகளாவிய பிரச்சினையாகும். ஜனாதிபதி பைடன் சமீபத்தில் பின்வருமாறு கூறினார்: "இது ஒரு புதிய உலகம். ஆப்கானிஸ்தானைத் தாண்டி பயங்கரவாத அச்சுறுத்தல் உருவெடுத்துள்ளது. சோமாலியாவில் அல் ஷபாப் இடமிருந்தும், சிரியா மற்றும் அரேபிய தீபகற்பத்தில் அல்கைதாவுடன் தொடர்புடையவர்களிடமிருந்தும் நாம் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறோம் மற்றும் ஐஎஸ்ஐஎஸ் ஆனது சிரியா மற்றும் ஈராக்கில் ஒரு கலிபா ஆட்சியினை உருவாக்க முயற்சிப்பதுடன் ஆபிரிக்கா மற்றும் ஆசியா முழுவதும் துணைக் குழுக்களைத் தாபிக்க முயல்கிறது.

இவற்றுக்கான தீர்வுகள் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்கு நாம் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும் என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவது முக்கியம் என நான் நினைக்கிறேன். சட்ட அமுலாக்க ஒத்துழைப்பு மற்றும் கடற் பாதுகாப்பு என்பன தொடர்பில் நாம் இணைந்து பணியாற்றுதல் அவசியம் மற்றும் உளவுத்தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நாம் இலங்கை உட்பட அனைத்து பங்குதாரர்களையும் ஊக்குவிக்கிறோம். அதற்கு மேலதிகமாக, சட்டவிரோத அமைப்புகள், போதைப்பொருட்கள் மற்றும் பிற குற்றச் செயல்களால் பயங்கரவாதக்

குழுக்கள் நிதியளிக்கப்படுகின்றன, எனவே நாடுகடந்த குற்றங்களுக்கான சர்வதேச ஒத்துழைப்பு மிகமுக்கியமானது.

எவ்வாறாயினும், சிவில் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை மீறாமல் நாம் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது மிக அவசியம். தீவிரமயமாக்கலை அதிகரிக்காத அல்லது அப்பாவி மக்கள் விளைவுகளை அனுபவிக்காத வகையில் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதை உறுதிப்படுத்தும் அதிநவீன பொறிமுறைகள் தற்போது எம்மிடம் இருப்பது உலகமயமாதலின் நன்மைகளில் ஒன்றாகும். இந்த உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மதித்து, அனைத்து சமூகங்களுடனும் நேர்மறையாக செயற்படுவதன் மூலம், இறுதியாக நாம் பயங்கரவாதத்திற்கான வாய்ப்பைக் குறைப்போம்.